பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

93. பழம்பொருட் சின்னங்கள் சிலவற்றை புதுப்பித்தல், பாதுகாத்தல் குறித்த கல்வித்துறையின் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் தேதியிடப்பெற்ற 1109 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் தொல்பொருளியல் சார்ந்த இடங்கள், தொல்பொருள் சின்னங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1966) 39 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

94. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த வருவாய்த் துறையின் 19—4—1978 ஆம் தேதியிடப் பெற்ற 912 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

95. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு அமைச்சர்கள் பயணப்படி விதிகளின் திருத்தமொன்று செய்வது குறித்த பொது (பணி அமைப்பு 1) துறையின் 26—5—1978-ல் தேதியிடப்பெற்ற 971 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

96. 1976-77ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கை [இந்திய அரசிலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

97. 1976–77 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது];

98. 1976–77-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

99. தமிழ்நாடு அரசின் 1976–77 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் மீதான அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1978 செப்டம்பர் 14]

100. தமிழ்நாடு அரசின் 1976-77 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்க கணக்குகள் மீதான அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*101. 1976-77 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போககுவரத்துக் கழகத்தின் 5-வது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

101. அ. 1976-77 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாடு மினசார வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை. [1948ஆம் ஆண்டு மின்சாரம் வழங்குவது குறித்த சட்டத்தின் 69 (5) (அ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

102. சென்னை கிண்டி, சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் 30—10—1977 அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற, மாண்புமிகு நீதிபதி திரு. பி. எஸ். சோமசுந்தரம் விசாரணைக் கமிஷன் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

103. கோயம்புத்தூர், லியோகவுண்டர் மகன் அற்புதசாமி என்ற எல். அப்பு காணமற்போனது குறித்து, அதில் காவலர்கள் எவ்வாறேனும் சம்பந்தப்பட்டிருந்தால் அதனை விசாரித்து முடிவு செய்வதற்காக நியமிக்கப்பெற்ற திரு. எஸ். ஏ. காதர் விசாரணைக் கமிஷனின் அறிக்கை, [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

58. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு; (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978.)

59. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமன்ற முன் வடிவு எண் 40/1978.)

**60. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1978.)